
## திராவிடத்தால் வாழ்கிறோம்

942

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

**தமிழ்.கா.அமுதரசன்**

19

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுப் பூர்வமாக விவரிக்கும் தொடர்!

# அம்மையாரும் அவசர கோலமும்...

*2016-ஆம் ஆண்டு மே மாதம், திருநெல்வேலியில் தேர்தல் பிரச்சாரத்தில் பேசினார் அம்மையார் ஜெயலலிதா. 'அ.தி.மு.க. ஆட்சி அமைந்தால், தமிழ்நாட்டில் பொது நுழைவுத் தேர்வு இல்லாமல், மருத்துவ மாணவர் சேர்க்கையை நடத்த தனிச்சட்டம் கொண்டு வருவோம்' என வாக்குறுதி அளித்தார். தேர்தல் வாக்கு அறுவடைக்காக, அவசர கோலத்தில் அவர் அள்ளித் தெளித்த எந்த வாக்குறுதியிலும் எப்போதும் உறுதியாக நின்றதில்லை. நீட் நுழைவுத் தேர்வில் மட்டுமல்ல; தமிழ்நாடு அரசின் தொழிற்கல்வி நுழைவுத் தேர்விலும் அப்படித்தான் நடந்து கொண்டார்.*

*2005-ஆம் ஆண்டு ஆட்சியின் கடைசி ஆறு மாதங்கள். ஜூன் 9-ஆம் தேதி, அவசர அவசரமாக தொழிற்கல்விக்கான பொது நுழைவுத் தேர்வை ரத்து செய்வதாக ஆணை பிறப்பித்தார் ஜெயலலிதா. (அரசாணை எண்: 2005 / 184) சட்ட விதிகள் எதையும் பின்பற்றவில்லை. ஆணையங்கள் பரிந்துரைகள் இல்லை. அவர் மனப்போக்குக்கு, தேர்தல் திசைதிருப்பும் வேலையாக, 'பிளஸ்-2 தேர்வில் பெற்ற மதிப்பெண் அடிப்படையிலேயே, தொழில் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை நடைபெறும்' என்றும் அறிவித்தார்.*

### நீதிமன்றம் சென்ற மாணவர்கள்

*"மாணவர்கள் சேர்க்கைக்கான நடைமுறைகளை மாற்றுவதற்கு, அரசுக்கு உரிமையில்லை. ஓராண்டாக கஷ்டப்பட்டு தேர்வு எழுதி, அதிக மதிப்பெண்கள் பெற்றுள்ளோம். திடீரென்று ரத்து செய்வதால், எங்களுக்கு பாதிப்பு ஏற்படும்"என்று தேர்வு எழுதி வெற்றிபெற்ற மாணவர்கள், சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர்.*

*பிரியதர்ஷினி என்ற மாணவி தொடர்ந்த அந்த வழக்கு, இன்றைக்கும் நுழைவுத் தேர்வு வழக்கு வாதங்களில் முக்கியமானதாக உள்ளது. "நுழைவுத் தேர்வு முறையிலேயே மாணவர்கள் சேர்க்கை நிரப்பப்பட வேண்டும் என்றும், +2 வில் அதிக மதிப்பெண்கள் பெற்றிருந்தாலும், பொது நுழைவுத் தேர்வு நடத்தப்பட்டிருந்தால், தனக்கு சிறந்த மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்திருக்கும்" என்றும் அவரது வாதம் இருந்தது. இதே கருத்துடன் பல மாணவர்களும் நீதிமன்றத்தை நாடினர்.*

*தலைமை நீதிபதி மார்கண்டேய கட்ஜூ மற்றும் நீதிபதி இப்ராகிம் கலிஃபுல்லா ஆகியோர் அடங்கிய அமர்வு மாணவர்களின் வாதங்களுக்குப் பின்னர், "மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கான நுழைவுத் தேர்வை ரத்து செய்து, தமிழக அரசு பிறப்பித்த உத்தரவு செல்லாது" எனத் தீர்ப்பளித்தது.*

*09.06.2005 அன்று வெளியான ஓர் அரசாணை, சென்னை உயர்நீதி மன்றத்தால், 27.06.2005 அன்றே தள்ளுபடி செய்யப்பட்டது.*

*'மாணவர்களின் கல்வி உரிமையைக் காப்பாற்ற, அரசு முந்தைய நடைமுறையின் படியே நுழைவுத் தேர்வு நடத்தி, அதன் மூலம் மருத்துவம் மற்றும் பொறியியல் சேர்க்கை வழங்க வேண்டும்' என நீதிமன்றம் உத்தரவிட்டு அம்மையாருக்குக் குட்டுவைத்தது.*

### மீண்டும் அவசரம் – அம்பலம்

*நுழைவுத்தேர்வுக்கு எதிரான தமிழ்நாட்டு மக்களின் மனநிலையை, 'தேர்தல் அறுவடை'யாக மாற்ற நினைத்தார் அம்மையார் ஜெயலலிதா. அதற்காக, அவசரகதியில் 'தமிழ்நாடு தொழில்முறைப் படிப்புகளில் சேர்க்கை ஒழுங்குமுறைச் சட்டம் - 2006' என ஓர் அவசர சட்டத்தை பிப்ரவரி 2-ஆம் தேதி அறிவித்து, பிப்ரவரி 3-ஆம் தேதியே அரசாணை வெளியிட்டு, பிப்ரவரி 18 அன்று நடைமுறைக்கு வரும் என்றும் அறிவித்தார்.*

*இந்த ஒழுங்குமுறைச் சட்டத்தை எதிர்த்தும், மீண்டும் நுழைவுத் தேர்வு வேண்டும் என்றும் ஒரு தரப்பினர் சென்னை உயர்நீதிமன்றத்துக்குச் சென்றனர். (Minor Nishanth Ramesh vs The State Of Tamil Nadu on 27 February, 2006) 'மாநில கல்வி வாரியத்தில் பயின்ற மாணவர்களுக்கான பொது நுழைவுத் தேர்வை அரசு ரத்து செய்வதுடன், மற்ற வாரியங்களில் பயின்ற மாணவர்களுக்கு அதைக் கட்டாயமாக்குகிறது. மாநில கல்வி வாரியத்தில் பயின்ற மாணவர்களுடன் ஒப்பிடுகையில், மாநில வாரியம் அல்லாத வாரியங்களில் படிக்கும் மாணவர்களுக்கு எதிரான அப்பட்டமான பாகுபாடாகும்' என அவர்களின் வாதம் அமைந்தது.*

*'மாநில வாரிய மாணவர்களுக்கு நுழைவுத் தேர்வு எழுதுவதிலிருந்து விலக்கு அளிக்கப்படுவதால், அவர்களுக்கு சாதகமான நிலை உருவாகும். அதே நேரத்தில் பிற வாரியங்களின் மாணவர்கள் பொது நுழைவுத் தேர்வை எழுத வேண்டும். எனவே, தமிழ்நாடு அரசின் அவசர சட்டத்தின் விதிகள் பாரபட்சமானவை. இது, அரசியலமைப்பின் 14-வது பிரிவை மீறுவதாகும்' என மாணவர் தரப்பில் வாதிடப்பட்டது.*

> **நுழைவுத்தேர்வுக்கு எதிரான தமிழ்நாட்டு மக்களின் மனநிலையை, 'தேர்தல் அறுவடை' யாக மாற்ற நினைத்தார் அம்மையார் ஜெயலலிதா.**

*நீதிபதிகள் ஏ.பி.ஷா, பிரபா ஸ்ரீதேவன் அமர்வின் விசாரணைக்குப் பின், "இந்த நுழைவுத் தேர்வை ரத்து செய்யும் அதிகாரம் மாநிலச் சட்டமன்றத்துக்குக் கிடையாது. மேற்படி சட்டம் இந்திய மருத்துவ கவுன்சில் (MCI) இந்திய தொழில்நுட்பக் கல்வி கவுன்சில் (AICTE) ஆகியவற்றின் விதிமுறைகளுக்கு எதிரானது. குறிப்பாக, அரசியலமைப்புச் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள 'அனைத்து மக்களின் சம உரிமைக்கு' எதிரானது" என தீர்ப்பு அளிக்கப்பட்டது.*

### ஆசிரியர் கி.வீரமணி அளித்த தெளிவு

*2005-ஆம் ஆண்டில், இரண்டு முறை எந்த முன்னேற்பாடு இன்றி, சட்டத்துடனும் மாணவர்கள் நலனுடனும் விளையாடினார் அம்மையார் ஜெயலலிதா. அப்போது, திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அளித்த ஆலோசனைகளையும் அம்மையார் புறக்கணித்தார். அதுதொடர்பாக, 2015-ஆம் ஆண்டில் நீட் நுழைவுத் தேர்வுக்கு எதிராக, ஆசிரியர் வெளியிட்ட ஓர் அறிக்கையில் தெளிவுபடுத்தி இருந்தார்.*

*"2005-ஆம் ஆண்டு நுழைவுத் தேர்வை ரத்து செய்வதற்கு முன், முதலமைச்சருக்கு, திராவிடர் கழகத்தின் சார்பில், வல்லுநர் குழு ஒன்றை அமைக்க யோசனை தெரிவிக்கப் பட்டது. பல்வேறு பாடத்திட்ட முறைகள் உள்ளதால், மாணவர்களின் மதிப்பெண்கள் சம அளவில் இருக்க வாய்ப்பு இருக்காது. அவற்றைச் சமப்படுத்தும் வகையிலான பரிந்துரைகளை அந்தக் குழுவிடமிருந்து பெறலாம். அதன்படி, தமிழ்நாடு அரசு அவசர சட்டத்தைப் பிறப்பித்தால், நீதிமன்றம் அதனைத் தடுக்காது என்ற கருத்தினைத் தெரிவித்திருந்தும் (விடுதலை-16.1.2006) அதனைப் பரிசீலிக்காத தன்மையால், சென்னை உயர்நீதிமன்றம் தமிழ்நாடு அரசால் பிறப்பிக்கப் பட்ட ஆணை செல்லாது என்று தீர்ப்பளித்து விட்டது. இரண்டு முறை அ.தி.மு.க. அரசு நுழைவுத் தேர்வை ரத்து செய்தும், நீதிமன்றம் செல்லாது என்றே கூறிவிட்டது. (27.6.2005 மற்றும் 27.2.2006)" என ஆசிரியர் அம்மையாரின் அவசர கோலத்தை விலாவாரியாக விளக்கி இருப்பார்.*

*இப்படியான சட்டச் சிக்கலை கலைஞர் எப்படிக் கையாண்டார்? எப்படி நுழைவுத் தேர்வு ரத்து சட்டத்தைச் சாத்தியமாக்கினார்? அதில்தான் அவர், ஆகப்பெரும் மக்கள் நலன் கொண்ட தலைவராக உயர்ந்து நிற்கிறார்.*

...தொடரும்

ஓவியம் : ரவி பேலட்




## பா.ஜ.க.வினர் அறிவு - அபாரமா, அபாயமா?

ஆகஸ்ட் 23-ஆம் தேதி 'தேசிய விண்வெளி தின'மாக கடந்த சில ஆண்டுகளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அதன்படி 23-ஆம் தேதி, நாட்டின் விஞ்ஞானிகளையும், விண்வெளித்துறை சாதனைகளையும் புகழ்ந்திருந்தார் பிரதமர் நரேந்திர மோடி. அதேநேரத்தில், முன்னாள் ஒன்றிய அமைச்சரும் பா.ஜ.க. பிரமுகருமான அனுராக் தாகூர், அறிவியலுக்குப் புறம்பான கருத்தினைக் கூறி 'பா.ஜ.க. விரும்பும் கல்வி முறை இதுதான்' என உறுதிப்படுத்தியுள்ளார். இமாச்சல பிரதேசத்தின் நாடாளுமன்ற உறுப்பினரான இவர், தேசிய கல்விக் கொள்கை-2020-இன்படி செயல்பட்டு வரும் பி.எம்.ஸ்ரீ.பள்ளி ஒன்றில் 'தேசிய விண்வெளி தினம்' அன்று கலந்துகொண்டு, 'விண்வெளிக்கு முதன்முதலில் சென்றவர் அனுமன்' என அறிவியலுக்கு விரோதமான கருத்தை மாணவர்கள் மத்தியில் விதைத்துள்ளார்.

தனது கருத்துக்கு வலுசேர்க்கும் வகையில், 'நமது ஆயிரமாண்டு கால பாரம்பரியம், கலாசாரம் ஆகியவற்றைப் பாடப்புத்தகங்களுக்கு வெளியே காண வேண்டும். பிரிட்டிஷார் நமக்குக் கற்றுத் தந்தவற்றை மட்டுமே நாம் பேசிக் கொண்டிருக்கக் கூடாது. பள்ளி ஆசிரியர்கள், முதல்வர்கள் நமது பாரம்பரியத்தை, மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும்'' எனப் பேசியிருக்கிறார். அவர் பாரம்பரியம் என்று சொல்வது புராணக் கதைகளைத்தான்.

உலக அளவில், மாணவர்கள் அறிவியல் உண்மைகளைக் கற்றுக் கொண்டிருக்க, இந்தியாவில் அதே வரலாற்றை அறிவியலுக்குப் புறம்பாக கற்றுக்கொள்ள வைப்பது, ஆபத்தான கல்விச் சூழலை உருவாக்கும் என சமூகவலைதளங்களில் கடும் கண்டனங்கள் எழுந்துள்ளன. "பா.ஜ.க.வினரின் அறிவுச் செயல்பாடு, நாளுக்கு நாள் அபாரமாகி வருகிறது'' என கிண்டலுடன் விமர்சிக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசனின் X தளப் பதிவு பலராலும் பகிரப்பட்டு வருகிறது.

## ஃப்ளாஷ்பேக்



### தற்காப்புக் கலைப் பயிற்சியை ரசித்த தலைவர்!



மாஸ்டர் பெ.சேகர்

2002-ஆம் ஆண்டு, ஜூலை மாதம் 12 ஆம் தேதி, அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கத்தில், கழகத் தொண்டர் அணியினருக்கு அளிக்கப்பட்ட தற்காப்புக் கலையான தேக்வாண்டோ செயல் வழிப் பயிற்சியினை முத்தமிழறிஞர் கலைஞர், இனமானப் பேராசிரியர், அண்ணன் ஆற்காட்டார் ஆகியோர் கண்டு ரசித்தனர். பயிற்சி ஆசிரியராக இருந்த என்னை அழைத்து, பயிற்சி குறித்து தலைவர் அவர்கள் விளக்கம் கேட்ட மகிழ்வான தருணம்.

**– மாஸ்டர் பெ.சேகர், மாநிலச் செயலாளர், தி.மு.க.தொண்டர் அணி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### மூன்றாவது பொது மாநாடு!

1961-ஆம் ஆண்டு, ஜூலை 13-ஆம் தேதி முதல் 16-ஆம் தேதி வரை, நான்கு நாட்கள் மதுரை திருப்பரங்குன்றத்தில் கழகத்தின் 3-வது பொது மாநாடு நடைபெற்றது. மாநாட்டுப் பொருளாளராக கலைஞர் செயல்பட்டார். நடிகர் எஸ்.எஸ்.இராசேந்திரன் நடித்த 'தென்பாண்டி வீரன்', 'மணிமகுடம்' நாடகங்களும், நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி நடித்த, 'தமிழ் வாழத் தலை கொடுத்தான்' நாடகமும் எம்.ஆர்.ஆர்.வாசு நடித்த நாடகமும் நடைபெற்றன.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131